ஆதிதிராவிடர்களுக்கும் கொடுக்காத நிலைமையையும் அரசு அறியுமா? அதற்கு உடந்தையாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அதிகாரிகளைப் பொறுத்தவரையிலும் தாமதப்படுத்துவதை அரசு உடனடியாகத் துரிதப்படுத்தி அதை நடைமுறைப்படுத்தும். அதிகாரிகள் செய்கிற தவறுகளை இந்த அரசு கண்டித்துத் திருத்தும். நடவடிக்கை எடுக்கும். ஆனால் நீதிமன்றங்களுக்கு செல்லுகிறபோது நீதிபதிகள் எதைச் சொன்னாலும் அது சரியோ, தப்போ அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டப்பாட்டில் இருக்கிறோம்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, விழுப்புரம் தாலுகா, கப்பியாம்புலியூர் கிராமத்தில் ஏற்கனவே சென்ற முறை மானியக் கோரிக்கையின்போது கூட குறிப்பிட்டு இருந்தேன். அந்த கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தை மீண்டும் அரசு—ஏரியிலே மரங்கள் போடவேண்டும் என்ற காரணத்தால்—எடுத்துக் கொண்டு விட்டது. அந்த நிலங்களை மீண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திருப்பிக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட தாலுகாவில் குறிப்பிட்ட ஊரைப் பற்றிய விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

பாலிஸ்டர் நூலிழைக்கு விதிக்கப்பட்டுள்ள வரி.

*வினா எண். 499—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்கானிக் கெமிகல்ஸ் நிறுவனத்தார் தயாரிக்கும் பாலியஸ்டர் ஸ்டேபிள் பைபருக்கு (Polyster staple Fibre) 4 சதவீதம் வரிவிதிப்பிலிருந்து 3 சதவீதமாக தமிழக அரசு குறைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனால் அரசுக்கு ஏற்படும் இழப்புத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) மற்றும் (ஆ): 20-12-1972 முதல் பாலியஸ்டர் நூலிழை மீது குறைந்த வரி வீதமாக 2 சதவீத பலமுனை வரி விதிக்கப்பட்டு வந்தது. 20-12-1980 முதல் இவ்வரி வீதம் 3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ரூ. 38.5 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

துணை வினாக்கள் இல்லை.